# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | J.S.T.நல்லப்பா |
| Father's Name | ஜேம்ஸ் என்.செல்வதாஸ் |
| Village | சென்னை |
| Taluk | சென்னை |
| Calling | ஓய்வு பெற்ற மத்திய அரசு ஊழியர் |
| Age | 70 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **18.08.2025**

**O.S. No. 100/2003** **பி.வா.சா.1**

**<u>முதல் விசாரணை:-</u>**

இவ்வழக்கில் நான் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் 1-வது சாட்சியாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். படிக்க கேட்டேன் நான் சொன்னபடி இருந்தது. அதன் பின்னர் அதில் கையொப்பம் இட்டேன்.

| | | |
|---|---|---|
| **பி.வா.சா.ஆ.4** | : | 19.09.1984ம் தேதியிட்ட ஜேம்ஸ் என்.செல்வதாஸ் அவர்கள் |

| | | |
|---|---|---|
| | | ஏற்படுத்திய பதிவு எண்.57/1984 கொண்ட உயில் ஆவணம் சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ.5** | : | 27.03.2002ம் தேதியிட்ட 07.12.1988ம் தேதியில் "மேரி ஜேம்ஸ் மெமோரியல் டிரஸ்ட்" ஆவணத்திற்கான இணைப்பு மற்றும் கூடுதல் டிரஸ்ட் ஆவணம் பத்திர எண்.243/2002 கொண்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் |

<u>குறுக்கு விசாரணை:-</u>

**(சாட்சி தனக்கு ஆங்கிலமே நன்கு பரீட்சையம் என்று தெரிவித்தார். பின்பு வாதி தரப்பு வழக்கறிஞரும் ஒப்புக்கொண்டதற்கு இணங்க சாட்சயிடம் ஆங்கிலத்திலேயே கேள்வி கேட்டு பதில் பெறப்பட்டு, சாட்சியும் தமிழில் பதிவு செய்யப்படுகிறது. இதற்கு இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.)**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் PUC வரை படித்துள்ளேன். கடந்த 25 வருடங்களாக வழக்கு சொத்து சம்மந்தமாக நான் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட பள்ளி ஒன்றை வாதி தான் நடத்தி வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது தவறு, தமிழக அரசாங்கம் தான் பள்ளியை நடத்தி வருகிறது, வாதியில்லை. கடந்த 25 வருடங்களாக வழக்கு சொத்தின் பள்ளியின் தாளாளர் யார் என்றால் கடந்த 25 வருடங்களாக தாளாளரே கிடையாது (சாட்சி தற்போது மாற்றி J.S.எட்வர்ட் குணராஜ் என்று பதில்

கூறினார், பின்பு மீண்டும் தாளாளர் யாரும் இல்லை என்றும் அரசாங்கம் தான் நடத்தி வருகிறது என்று பதில் கூறுகிறார்.)

2. வழக்கு சொத்தின் பள்ளியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், திரு.வி.க.மிடில் ஸ்கூல். மேற்படி பள்ளியானது அரசாங்க பள்ளியா அல்லது அரசாங்க நிதியுதவி பெறும் பள்ளியா என்றால் அரசாங்க நிதியுதவி பெறும் பள்ளி ஆகும். ஒரு அரசாங்க நிதியுதவி பெறும் பள்ளியானது தாளாளர்இல்லாமல் செயல்பட முடியாது என்ற விவரம் எனக்கு தெ்ரியுமா என்றால் தெரியும், பொதுவாக அவ்வாறு செயல்படாது, ஆனால் மாவட்ட கல்வி அலுவலர் அவர்களின் உத்தரவின்பேரில் செயல்படலாம்.

3. மேற்படி அவ்வாறு செயல்பட மாவட்ட கல்வி அலுவலர் அவர்களின் உத்தரவு ஏதும் என்னிடம் உள்ளதா என்றால் இருக்கிறது. மேற்படி உத்தரவின் தேதி என்னவென்றால் தற்போது எனக்கு நினைவில்லை. மேற்படி உத்தரவு தோராயமாக எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. எத்தனை வருடங்களுக்கு முன்னர் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் தற்போது எனக்கு நினைவில்லை.

4. பள்ளி சம்மந்தமாக ஊழியர்களுக்கு யார் மூலம் சம்பளம் பெறப்பட்டு வழங்கப்படுகிறது என்றால் பள்ளியின் தாளாளர் மூலம் பெறப்பட்டு நேரடியாக ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. வழக்கு சம்மந்தமான பள்ளியின் தாளாளர் பெயர் என்னவென்றால் தாளாளர் பெயர் எனக்கு தெரியாது. என்னுடன் நீதிமன்றத்திற்கு யார் வந்துள்ளார்கள் என்றால் யாரும் வரவில்லை.

5. இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள டிரஸ்ட் ஆவணத்தை நான் படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். டிரஸ்டின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் மேரி ஜேம்ஸ் மெமோரியல் டிரஸ்ட் ஆகும். மேற்படி டிரஸ்டில் எத்தனை டிரஸ்டிகள் இருந்தார்கள் என்றால் 5 நபர்கள் இருந்தார்கள். கடந்த 11.08.2001 இயற்றப்பட்ட தீர்மானத்தை படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன், தற்போது நினைவில்லை. மேற்படி தேதியில் யார் டிரஸ்டில் சேர்க்கப்பட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. பள்ளியை டிரஸ்ட் தான் பராமரித்து வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சரிதான், டிரஸ்டின் கீழ் தான் பள்ளி செயல்பட்டு வருகிறது. கடந்த 16.12.2001 தேதியிட்ட தீர்மானத்தை நான் படித்துள்ளேனா என்றால் இல்லை, அந்த ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி இயற்றப்பட்ட தீர்மானமான வாதி தாக்கல் செய்த வா.சா.ஆ.2 நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். டிரஸ்டின் தலைவர் யார் என்று தெரியுமா என்றால் தெரியும், சண்முகம் ஆகும், (மேற்படி சண்முகம் ஸ்கூல் கமிட்டியின் தலைவர் தான் என்றும் டிரஸ்டின் தலைவர் அல்ல என்றும் சாட்சி தெரிவிக்கிறார்.) எனக்கு சுதாகர் குணசேகரை என்ற நபரை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபருடைய மனைவியான வனிதாமணி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது.

7. கடந்த 2001ம் வருடம் பள்ளிக்கல்வித்துறைக்கு என் சார்பாக வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் கொடுத்திருந்தேனா என்றால் இல்லை.

நான் டிரஸ்டின் செயலாளரா அல்லது பள்ளி கமிட்டியின் செயலாளரா என்றால் நான் மேரி ஜேம்ஸ் மெமோரியல் டிரஸ்டின் செயலாளர் ஆவேன். நான் மேற்படி பள்ளியின் Education Committee–ல் பங்கு வகிக்கவில்லை என்றால் சரியல்ல, அதற்கும் நான் தான் செயலாளர். மேற்படி பள்ளியின் Education Committee–ல் செயலாளராக எத்தனை ஆண்டுகளாக இருந்தேன் என்றால் தற்போது எனக்கு நினைவில்லை.

8. நான் கடந்த 2000ம் ஆண்டு வரை தான் செயலாளராக இருந்தேன் என்றாலும் அதன் பிறகு நீக்கப்பட்டு விட்டேன் என்றாலும் சரியல்ல. கடந்த 2002ம் வருடம் நான் டிரஸ்டிலோ அல்லது பள்ளியின் Education Committee–லோ எந்தவொரு பொறுப்பும் வகிக்கவில்லை என்றால் சரியல்ல, தற்போது வரை இரண்டிற்கும் நான் தான் செயலாளர். நான் கடந்த 2001ம் வருடம் டிரஸ்டில் போர்டு மீட்டிங் ஏதேனும் நடத்தினேனா என்றால் இல்லை. 16.12.2001 தேதிக்கு பிறகு நான் டிரஸ்ட் போர்டு மீட்டிங் ஏதும் நடத்தினேன் என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால் இல்லை.

9. 16.12.2001 தேதிக்கு பிறகு பள்ளிக்கல்வித்துறைக்கு என் மூலமாக ஏதேனும் கடிதம் அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். மேற்படி கடிதம் ஏதேனும் அனுப்பியதற்கு நகல் எதும் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல, இருக்கிறது. மேற்படி கடிதம் எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்று தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை. மேற்படி நான் கடிதம் அனுப்பியதாக கூறுவதற்கு ஆதாரமாக நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்திருந்தால் தான் நீதிமன்றத்திற்கு மேற்படி விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

10. டிரஸ்டின் பை லா–ன் படி 3 மாதங்களுக்கு ஒருமுறை போர்டு மீட்டிங் கூட்ட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பை லா இருப்பது எனக்கு தெரியாது, ஆனால் ஓராண்டுக்கு ஒருமுறை எங்கள் வசதிக்கேற்ப நடத்துவோம். கடந்த 2001ம் வருடம் முதல் 2025ம் வருடம் வரை மேற்படி நான் கூறியதுபோல ஓராண்டுக்கு ஒருமுறை போர்டு மீட்டிங்க் நடத்தியதற்கு ஆதாரம் ஏதும் உள்ளதா என்றால் இருக்கிறது. மேற்படி விவரம் சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஏதேனும் ஆதாரமாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்தால் தான் அந்த விவரம் நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்றால் சரிதான்.

11. நான் கூறியதற்கு என்னால் ஒரு தேதியை கூட குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. மேற்படி நான் கூறியதுபோன்று மீட்டிங் நடந்ததற்கு அதில் பங்கேற்ற இடம் மற்றும் நபர்களின் விவரமாவது என்னால் சொல்லமுடியுமா என்றால் முடியாது. மேற்படி எந்தவொரு போர்டு மீட்டிங்கும் நடைப்பெறாததால் தான் என்னால் அதற்குண்டான இடம், தேதி, கலந்துகொண்ட நபர்கள் என்ற எந்தவொரு விவரமும் என்னால் கூறமுடியவில்லை என்றால் எனக்கு தெரிவிக்க விருப்பம் இல்லை.

12. என்னுடைய எதிர்வழக்குரையிலோ அல்லது உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவிலோ நான் போர்டு மீட்டிங் நடத்தினேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில் கூறியுள்ளேன். MJM டிரஸ்ட்–ன் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால்

தெரியும், அதன் எண்.391 வருடம் நினைவில்லை. பதிவு எண்.361/1989 கொண்ட டிரஸ்ட் நான் கூறும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட டிரஸ்ட் அல்ல என்றால் பதிவு எனக்கு சரியாக நினைவில்லை(சாட்சி தற்போது பதிவு எண்.361/1988 என்று பதில் கூறுகிறார்.)

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

| | |
|---|---|
| ***ESHWAR VISWANATHAN*** | *DISTRICT MUNSIF*<br>*Digitally signed by ESHWAR VISWANATHAN* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**